பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 23 சனிக்கிழமை (07.07.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 220

# தொப்பிகலவில் முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிர மோட்டார் தாக்குதல்!

## விமானப் படையினர் பலத்த குண்டு வீச்சு; மேஜர் ஒருவர் உட்பட 6 இராணுவத்தினர் பலி!!

மட்டக்களப்பு, ஜூலை 07

**தொப்பிகல காட்டுப் பகுதியில் மேலும் முன்னேறுவதற்கு படையினர் முயன்றவேளை, விடுதலைப் புலிகள் நீண்ட தூர வீச்சுக் கொண்ட மோட்டார் தாக்குதல்களை நடத்தினர்.**

**அதனால் நேற்று நண்பகல் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.**

புலிகள் நடத்திய அகோர மோட்டார் தாக்குதல்களில் மேஜர் ஒருவர் உட்பட ஆறு இராணுவத்தினர் பலியாகினர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

நீண்ட நேரம் தொடர்ந்த இந்தச் சண்டையின்போது, இராணுவத்தினருக்கு உதவும் பொருட்டு தொப்பிகலப் பகுதியில் விமானப் படையினர் பரவலாகக் கடும் குண்டு வீச்சுகளை நடத்தினர். தொப்பிகல நரக்க முல்லப் பகுதியிலேயே கடும் மோதல் நடைபெற்றதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியைக் கைப்பற்றியதும் தொப்பிகல முழுவதும் எங்கள் கைக்கு வந்துவிடும். தொப்பிகலவில் இருந்து புலிகளை அடியோடு விரட்டும் கட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பகுதியை விடுவிக்கும் இறுதி இராணுவ நடவடிக்கை இது - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க சொன்னார்.

விடுதலைப் புலிகளின் நீண்ட தூர மோட்டார் தாக்குதலுக்கு மத்தியிலும் படையினர் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் நேற்று மாலை அவர் செய்தி ஏஜென்சி ஒன்றுக்குத் தகவல் வெளியிட்டார். கிழக்கைப் படையினர் விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்டெடுகின்ற போதிலும், 14 வருடங்களாக அவர்களின் கோட்டையாக விளங்கிய தொப்பிகலவைப் படையினர் தம்வசமாக்குவதற்கு கடுமையாகப் போரிட

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலும் கிழக்கிலும் விமானத் தாக்குதல்கள்

கொழும்பு, ஜூலை 07

மட்டக்களப்பு மற்றும் மன்னார் பிரதேசங்களில் நேற்றுக்காலை விமானப் படையினர் தாக்குதல் மேற்கொண்டனர் என்று விமானப்படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டிசில்வா தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு - தொப்பிகல மற்றும் மன்னார் கிழக்கிலுள்ள பாலம்பிட்டி போன்ற பகுதிகளில் விமானப்படையினருக்குச் சொந்தமான 'கிபிர்' விமானங்கள் விடுதலைப்புலிகளின்நிலைகள் மீது குண்டுகளை வீசித் தாக்கின என்றும் விமானப் படைப் பேச்சாளர் கூறியுள்ளார். எனினும், தாக்குதல் குறித்த சேதவிவரங்களை விமானப் படையினர் வெளியிட வில்லை.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எதுவிதமான தகவல்களும் வெளிவரவில்லை. (சி)

## ஓமந்தைச் சோதனை நிலையத்தை ஏழுநாள்களும் திறக்குமாறு கோரிக்கை

### வன்னி மாவட்ட அரச அதிபர்கள் தளபதியிடம் முன்வைப்பு

வவுனியா, ஜூலை 7

வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்க வசதியாக ஏ-9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையத்தை ஏழு நாள்களும் திறக்க வேண்டும்.

வன்னியின் நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்கள் கூட்டாக இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கடந்தவியாழக்கிழமை வன்னி மாவட்ட அரச அதிபர்கள் வன்னிப் பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் பி. எதிரிசிங்கவைச் சந்தித்தபோதே இக்கோரிக்கையை விடுத்தனர்.

கிளிநொச்சி அரச அதிபர் நா. வேதநாயகன், முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மன்னார் அரச அதிபர் எஸ். நிர்கலஸ்பிள்ளை, வவுனியா அரச அதிபர் என். சண்முகம் ஆகியோர் தளபதியுடன் கலந்துரையாடினர்.

வன்னியில் நிலவும் அத்தியாவசியப் பொருள்மற்றும்எரிபொருள்தட்டுப்பாட்டை அரச அதிபர்கள் எடுத்து விளக்கினர்.

ஓமந்தை ஊடான போக்குவரத்தை ஏழு நாள்களும் மேற்கொள்வதன் மூலம் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம் என அரச அதிபர்கள் சுட்டிக்காட்டினர்.

சோதனை நிலையத்தை ஏழுநாள்களும் திறப்பதற்குப் படைத் தரப்பு தயாராக இருப்பதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தளபதி பதில் அளித்தார்.

இதேவேளை-

சோதனை நிலையத்தை ஏழு நாள்களும் திறப்பது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சு நடத்த இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## அதிபர் பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

தற்சமயம்நடைபெற்றுவரும்அதிபர்களை பதவி உயர்த்தும் நேர்முகப் பரீட்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பை அடுத்து நேர்முகப் பரீட்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாடசாலைகளில் பதில் அதிபர்களாக பணிபுரிபவர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சைகளை நடத்திவிட்டு, அவர்களின் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளைச் சேர்ப்பதாக எடுத்துள்ள முடிவு குறித்து இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையில் கேள்வி எழுப்பினர்.

நேர்முகப் பரீட்சை முடிந்தபின் போட்டிப் பரீட்சைப் புள்ளி விபரங்கள் வெளியிடப்படும் என அமைச்சர் தெரிவித்தார். அமைச்சரின் இந்த முடிவை தொழிற்சங்கங்கள் எதிர்த்துள்ளன.

போட்டிப்பரீட்சையின் புள்ளிவிபரங்களை முதலில் வெளியிட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன. (அ-1)

## சமாதானப் பேச்சு மூலமான தீர்வுக்காக அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உழைக்கும்

### தூதுவர் றொபேட் ஓ பிளேக் சொல்கிறார்



கொழும்பு, ஜூலை 7

அழகிய இலங்கையை கடந்த பல வருடங்களாக பிளவுபடுத்தி வைத்திருக்கும் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. அப்பணியை எமது நாடு தொடர்ந்தும் மேற்கொள்ளும்.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்.

அமெரிக்காவின் சுதந்திர தினமான இம்மாதம் நான்காம் திகதி வெளியிட்ட செய்தியிலேயே தூதுவர் பிளேக் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கா இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாகும். இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இலங்கை மக்களின் அவாவை நிறைவு செய்வதற்கு அமெரிக்கா மிகுந்த அக்கறையுடன் உழைக்கும் - என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கும்இலங்கைக்கும்இடையே 50 வருடங்களுக்கு மேலாக நிலவும் இரு தரப்பு நட்புறவை அவர் தமது செய்தியில் விவரித்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு அமெரிக்கா கூடுதல் பங்களித்து வருவது குறித்தும் அமெரிக்காவின் பெரும் நிறுவனங்களான சிற்றி பாங்க், ஷெவ்றோன், ஏஈஎஸ் ஆகியன இலங்கையில் முதலீடு செய்வதையும் அவர் தமது செய்தியில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வன்னிப் பிராந்திய கள நிலை குறித்து இராணுவத் தளபதி நேரில் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 7

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகா நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

தற்சமயம் வன்னியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் இந்த விஜயம் அமைந்திருந்தது என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இராணுவத் தளபதியை வன்னிப் பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ. யு.வி. எதிரிசிங்க வரவேற்றார்.

வன்னித் தளபதிகளுடன் கலந்துரையாடிய இராணுவத் தளபதி கள நிலைமை குறித்து மேலதிக உத்தரவுகளை வழங்கினார். (அ-1)

## திருமலையில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஜூலை 07

திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு பெருமளவிலான வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களை படையினர் மீட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

திருகோணமலையின் வடபுறக்கிராமம் ஒன்றில் ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட தேடுதலில் நூறு குண்டுகள் 8 ஆயிரத்து 200 ரவை

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆவரங்கால் வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஆவரங்காலுக்கும் அச்சுவேலிக்கும் இடையில், பருத்தித்துறை வீதியில் வைத்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வதிரி, நாவலடியைச் சேர்ந்த திருமணத் தரகரும் சமாதான நீதிவானுமாகிய எஸ். சிவகுமார் (வயது 45) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அறியப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி. ச. இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

இவரது சடலத்தில் தலையில் ஹெல்மட் காணப்பட்டதையடுத்து, நீதிவான் அது தொடர்பாக விசாரணை நடத்தினார்.

இவரும் வேறு ஒருவரும் மோட்டார் சைக்கிளில் வந்தனர் என்றும் சூட்டுச் சத்தம் கேட்டதை அடுத்து மோட்டார் சைக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு,ஜூலை 07

கண்டி நகரில் இடம்பெறவுள்ள எசல பெரஹராவை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள கண்டி பெரஹராவைக் குழப்புவதற்காக வெடிகுண்டு பொருத்தப்பட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு சென்ற இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 7

நாவாந்துறையைச் சேர்ந்த இருவர் கொழும்பில் காணாமற் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறை, மண்பிட்டியைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தந்தையான செல்வராசா ஜெயராஜ் (வயது 37) என்பவரும் அவருடன் சென்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான நீக்கிலாப் பிள்ளை ஞானதாஸ் (வயது 58) என்பவரும் காணாமற் போயுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் கொழும்பு சென்று கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டு கடந்த 4ஆம் திகதி திரும்பி மன்னாருக்குச் செல்லும் வழியில் களனிப் பாலத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் எங்கு இருக்கின்றார்கள் எனத் தெரியவில்லையெனவும் குறிப்பிட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செல்வராஜா ஜெயராஜ் மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிலை யாழ்ப்பாணத்தில் செய்து வந்தார். இவர்கள் கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக் குச் சென்றார் கள் என்பதுகுறிப்பிடத்தக்கது. (அ-1-68)

## கால்நடைத் தீவனங்களின் விநியோகம்

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள கால்நடைத் தீவனங்கள் கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இத் தீவனங்களை கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டமைக்கான கட்டணங்களை விரைவில் செலுத்த வேண்டியுள்ளது.

எனவே மாடு, ஆடு, கோழிப் பண்ணையாளர்கள் தீவனங்களைப் பெற்று அதற்கான பணத்தை செலுத்த வேண்டும் என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப் பாளர் கேட்டுள்ளார். (1)

## ஊர்காவற்றுறை - காரைநகர் பாதைச் சேவை ஆரம்பம்

ஊர்காவற்றுறை - காரைநகர் பாதைப் போக்குவரத்து சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

வீதி அதிகாரத்துவ சபையால் நடத்தப்பட்டு வந்த இப்போக்குவரத்துச்சேவை பாதைப் பழுதடைந்ததால் கடந்த இரு மாதங்களாக நடைபெறவில்லை. அதனால், கடற்படையணியின் படகுகள் மூலமே போக்குவரத்து நடைபெற்றது. இச்சேவை சீராக நடைபெறாததனால் பயணி கள் மற்றும் அரச ஊழியர்கள் சிரமங்களை அனுபவித்தனர். தற்போது இப்பாதைப் படகு திருத்தியமைக் கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (அ-51)

## வினா டி வினாப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட வலய மட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

நாளை மு.ப. 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் வல யக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.(1-207)


## திரு.சு.செல்வராசா அவர்களுக்கு வாழ்த்தும் கைதடிப் பெருமக்களுக்கு நன்றியும்



அன்பு மூன்றெழுத்து
பண்பு மூன்றெழுத்து
கடமை மூன்றெழுத்து
பக்தி மூன்றெழுத்து
கைதடி மூன்றெழுத்து
நன்றி மூன்றெழுத்து
செல்வியும் மூன்றெழுத்து
மூன்றெழுத்தில் செல்வியின் மூச்சிருக்கும்

01-07-2007 அன்று சு.செல்வராசா அவர்கள் கைதடி வாழ் பெருமக்களால் சேவை நலன் பாராட்டுப் பெருவிழா எடுத்துக் கௌரவிக்கப்பட்டார்.

இப்பாராட்டு எனும் மணிமகுடம் பெற்ற அவரை வாழ்த்துவதோடு அவ்விழாவை மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்த அனைத்து அன்புநெஞ்சங்களுக்கும்கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எமது குடும்பம்சார்பில் நன்றிநவில்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி. (62500) குடும்பத்தினர்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61,இராமநாதன்வீதி,கலட்டி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

புறொயிலர் (Broiler) கோழி விற்பனைக்குண்டு.

தொடர்பு : அன்னா பாம், இணுவில்.

## மணமகள் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1971ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரம் 7 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர் பார்க்கிறோம்.*

தொடர்பு: வே.கிருஷ்ணகுமார்
0776568922
பொற்பதிரோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## மணமக்கள் தேவை

யாழ்.இந்துகௌரவகுடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் நிரந்தர குடியுரிமையுடைய 1979இல்பிறந்த, திருவோணம் 2ஆம்பாதம், கிரகபாவம் 25 உடைய அழகிய, சிவந்த நிறமுடையமணமகளுக்கு படித்த நற்குணமுள்ள மணமகனும் (உள்நாடு/வெளிநாடு),யாழ்.இந்து கௌரவகுடும்பம் கனிவில் குடியுருமையுடைய 1976இல் பிறந்தபூரட்டாதி 2ஆம்பாதம், கிரகபாவம் 22, விதவைப்பெண்ணுக்கு (பிள்ளைகள்இல்லை) படித்த நற்குணமுள்ள மணமகனும் தேவை(உள்நாடு/வெளிநாடு)மணமகள் கொழும்புவரவுள்ளார். தொடர்பு:ி.எ.தசிந்துஜன்
வங்களாவடி,வேலணை
தொ.பே: 0776184434, 0774047531
தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவும்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14 - 07 - 1926



மறைவு 07 - 06 - 2007

திருமதி
**சிவபாக்கியம் வேலாயுதர்**

இன்று (07.07.2007)சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*சாந்திபவன்,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.* (62514)

தகவல்:
மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் மார்க்கண்டு



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மார்க்கண்டுநேற்று (6.7.2007) வெள்ளிக்கிழமைகாலமானார்.

அன்னார்காலஞ்சென்ற ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் அன்புமகனும் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கணேசு,செல்வரெத்தினம்,சங்கரப்பிள்ளை, சரஸ்வதி(கனடா)ஆகியோரின் அன்புச்சகோதரனும், கலாவல்லி,கமலவல்லிஆகியோரின் அன்புத்தந்தையும், நந்தகுமார்(பிரதேசசெயலகம்-தெல்லிப்பழை), புவனேஸ்வரலிங்கம், கனடாவில் வசிக்கும் விஜயரத்தினம்,ஜெயராஜரத்தினம், மனோரத்தினம், மதிரத்தினம், ஜீவரத்தினம், பாலரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புமாமனும் விஜயகுமாரி,சந்திரகுமார், விஜயகுமார், சிவகுமார், உதயகுமார், திருக்குமார் ஆகியோரின் பெரியப் பாவும் இராசம்மா (கனடா), இராசலட்சுமி, நாகராசா (கனடா), காலஞ்சென்றநாகரத்தினம்,சிவப்பிரகாசம், நாகம்மா, கனகம்மாஆகியோரின் மைத்துனரும் பிரதீபன்,ரதீபன், தமிழினி, புருஷோத்தமன், துவாரகன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.07.2007) சனிக்கிழமை முற்பகல்11மணியளவில் மல்லாகத்தில்உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பழையநீதிமன்றவீதி,*
*மல்லாகம்.* (62516)

*தகவல்:*
நந்தகுமார்(மருமகன்).

### திருமதி பொன்னி முருகன்

மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னி முருகன் நேற்று (06.07.2007) வெள்ளிக்கிழமை மட்டுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகனின் அன்பு மனைவியும் அமரர்களான பண்டாரி -நாகி தம்பதியரின் அன்பு மகளும் செல்லையாவின் அன்புச் சகோதரியும் லட்சுமியின் மைத்துனியும் மகேஸ்வரி, குணேஸ்வரி (Swiss), நகுலேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா (றொபின்சன் Swiss) சந்திரமோகன் (London) ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி (London), மணிவண்ணன், சின்னத்துரை (வெள்ளை), றோகினி (Swiss) ஆகியோரின் மாமியும் கோகிலா - சதானந்தராசா (கோபு), சுகன்யா- விஜயரூபன் (கனடா), நவீனன், சோனியா (Swiss), யசிந்தன், டினேசன், தனுசன், நிலுஜா, நிதர்சினி (Swiss) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பானுசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2007) சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் சின்னத்து இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதங்குளம் வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (62510)

*தகவல்:*
ப.செல்லையா (சகோதரன்),
மு.சின்னத்துரை(மருமகன்),

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 2007

பின்வரும் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கான கேள்விகள் இக்ராட் பதிவுள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து என்னால் கோரப்படுகின்றன. வேலைத்திட்டங்களுக்கான இக்ராட் தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

*கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:* 19.07.2007 பி.ப ஒரு மணி
*கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:* 20.07.2007 மு.ப 10 மணி
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:* 20.07.2007 மு.ப 11மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை இவ்வலுவலக வேலைப்பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் வற் உட்பட |
|---|---|---|---|---|
| 1. | சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள பெட்டி மதகு புனரமைத்தல் | M 8 | 2000.00 | 575.00 |
| 2. | 5ஆம் குறுக்குத் தெரு, குருநகரில் உள்ள பக்க வடிகால் புனரமைப்பு | M 8 | 2500.00 | 575.00 |
| 3. | கற்குளம் ஒழுங்கையில் உள்ள பெட்டி மதகு புனரமைப்பு (சிறுவர் பூங்காவிற்கு அருகில்) (12'-0" X 11'-6") | M 8 | 2000.00 | 575.00 |
| 4. | முஸ்லிம் வீதியில் உள்ள பகுதிப் பக்க வாய்க்காலும், 1ஆம் இலக்கப் பெட்டி மதகு புனரமைப்பு | M 8 | 2000.00 | 575.00 |
| 5. | குருநகர் 2ஆம் குறுக்குத் தெரு ஒழுங்கையில் உள்ள பகுதிப் பக்க வடிகால் புனரமைப்பும் 5ஆம் குறுக்குத் தெரு சப்பல் வீதி சந்தியில் உள்ள பெட்டி மதகு புனரமைப்பு | M 8 | 2000.00 | 575.00 |
| 6. | கொட்டடி சிவன்பண்ணை வீதிச் சந்தியில் இருந்து வெள்ளாந்தெரு மூலை வரையுள்ள பக்க வடிகால் புனரமைப்பு | M 8 | 2500.00 | 575.00 |
| 7. | வண்ணான் குள வாய்க்காலில் இருந்து மின்சார நிலைய வீதி வழியாக உள்ள பக்க வடிகால் புனரமைப்பு | M 8 | 6000.00 | 575.00 |
| 8. | மூண்டுக் குளத்தில் இருந்து கடற்கரைக்கு அண்மையாகச் செல்லும் திருநகர் பிரதான வாய்க்கால் புனரமைப்பு | M 7 | 15000.00 | 1150.00 |
| 9. | இராஜேஸ்வரி வீதியில் உள்ள பெட்டி மதகு புனரமைப்பு | M 8 | 4500.00 | 575.00 |

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்,
06.07.2007


## விற்பனைக்கு

யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளரின் பாவனையில் இருந்த Laptop கணனி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
021 222 2796
0773790791

## உடன் விற்பனைக்கு

192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெருமாள் கோயில் சந்திக்கும், பிறவுண் வீதிச் சந்திக்கும் இடையில் 2 1/2 பரப்புக் காணியில் 60 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.

தேவன்
*192, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.*

பார்வையிடும் நேரம்:
காலை 9-12 மணி
மாலை 3-5 மணி

தொ.பே:
0774146219

## தவறிவிட்டது

187/2, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் என்னும் முகவரியைச் சேர்ந்த வேலாயுதம் பாலரூபன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (0901016079) ஓட்டுமடத்திற்கும் காரைநகருக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (சன்மானம் வழங்கப்படும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவை நேர்முகப்பரீட்சைக்கு ஆயிரம்பேர் ஆனால் 400 பேருக்கே நியமனம் வழங்க ஏற்பாடு

## மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் தகவல்

திருகோணமலை,ஜூலை7

வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற அதிபர் சேவை வகுப்பு 2-II இற்கான நேர் முகப் பரீட்சைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தோற்றினர். எனினும் 400 பேருக்கே நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

வடக்கு மாகாண சபை கல்வியமைச்சுச் செயலாளர் இ.இளங்கோவன் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

கடந்த மாதம் 11ஆம் திகதி முதல் வடக்கு மாகணத்தின் கீழ் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றன.

இந்த நேர்முகப்பரீட்சையில் ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர். அவர்களது விவரங்கள் அடங்கிய பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சையில் தோற்றியவர்களில் 400 பேருக்கே நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திறைசேரியின் அனுமதி கிடைத்த பின்பே இந்த நியமனங்கள் வழங்கப்படும் - என்றார் அவர்.

வகுப்பு 3 இற்கான நேர்முகப்பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. இந்த நேர்முகப்பரீட்சைகள் சகல வலயங்களிலும் ஒரே நேரத்தில் இடம்பெறுகின்றன.

மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் உதவியுடன் நேர்முகப்பரீட்சையை நடத்தி வருகின்றார். - என்று இளங்கோவன் மேலும் தெரிவித்தார். (1)

# நவாலியில் சுற்றிவளைப்பு

நவாலி,ஜூலை 7

நவாலி கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் அதிகாலை தொடக்கம் சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாக சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், சிறுவர் தவிர்ந்த ஏனையோர் நவாலி களையோடை அம்மன் ஆலயத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டு ஒவ்வொருவருடைய அடையாள அட்டையும் பரிசீலனை செய்யப்பட்ட பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (அ-100)

# சண்டிலிப்பாய் பிரிவில் சிறந்த பாடசாலைகள், முன்பள்ளிகள், ச.ச.நிலையங்களுக்கு விருது

நவாலி ,ஜூலை7

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கலை, கல்வி, கலாசாரம், ஒழுக்கம் என்பவற்றில் சிறந்த விளங்கும் பாடசாலைகள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிற்கு நவாலி எச்.எஸ்.சி.எம்.எவ். ஹேமலதா செல்வராசா ஞாபகார்த்த நிதியத்தினால் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம் மேலும் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சைக்காக கிராமசேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் பண உதவி செய்து வருகின்றது.

நூலக சேவை, சனசமூக நிலையம் சம்மந்தமான அபிவிருத்தி வேலைகள், போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு போஷாக்குணவுத் திட்டம் என்பவற்றையும் நடைமுறைப் படுத்தி வருகின்றது. (202-100)

# நவாலியில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோருக்கு வீடமைத்துக் கொடுக்க பி.செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை7

நவாலி வடக்கில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வீடற்ற குடும்பங்களுக்கு 'நிகாப்' திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

நவாலி வடக்கு (ஜே/134) கிராம அலுவலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வீடற்ற குடும்பங்கள் இனங்காணப்பட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலக வீடமைப்புத் திட்ட அதிகாரிகளால் படிவங்கள் வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்டுள்ளன.

இவர்களது படிவங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு உரிய பயனாளிகளுக்கு வீடமைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(202-95)

# தென்மராட்சி வலயத்தின் சில பாடசாலைகளில் மாணவர்களுக்குக் காலை உணவு இல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை7

. தென்மராட்சி வலய பாடசாலைகளில் சிலவற்றில் மாணவர்களுக்குப் போசாக்குணவு வழங்கப்படுவதில்லை. இதனால் வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் பாதிப்படைகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாணவர்களின் உடல், உள நலனைக் கருத்தில்கொண்டு பாடசாலைகளில் காலை உணவு வழங்கப்படுவது வழமை. எனினும் தென்மராட்சியில் சில பாடசாலைகளில் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கப்படுவதில்லை.

உணவு வழங்குவதற்கான பொருள்கள் பாடசாலைகளுக்குக் கிடைக்காமையே இதற்குக் காரணம் என்று சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர். (202-207)

# பணம் பெற்று பற்றுச்சீட்டும் வழங்கிய பின் பொருள்களை வழங்குவதில் ஏன் தாமதம்?

## வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கேட்கிறார்கள்

கரவெட்டி,ஜூலை7

வடமராட்சியில் கால்நடைத் தீவன விநியோகத்திற்கென முற்பணம் பெறப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. எனினும் தீவனத்தை வழங்குவதில் பின்னடிப்புச் செய்யப்படுகின்றது என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிப் பிரதேச கால்நடை உற்பத்தியாளர்கள் தமது கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர். தனியார் வர்த்தக நிலையங்களில் கால்நடைத் தீவனத்துக்கு நிலவிவரும் தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கால்நடைத் தீவனங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குத் தருவிக்கப்பட்டு கால்நடைச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் சங்கம் மூலம் விநியோகிக்கப்படும் தீவனத்தைப் பெற்றுக்கொள்வதற்கென பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட மக்கள் அவற்றைப் பெற முடியாது திண்டாடுகின்றனர்.

பொருளை விநியோகிக்காமைக்கான காரணமாக தீவனத்திற்கான புதிய நிர்ணய விலை இதுவரை உரிய அதிகாரிகளால் வழங்கப்படவில்லை என சங்கத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

விலை நிர்ணயம் செய்யப்படாத நிலையில் பற்றுச்சீட்டை சங்கத்தினர் எதற்காக வழங்கினர் என நுகர்வோர் கேள்வி எழுப்புகின்றனர். (202-70)




## நன்கொடை உதவி

வலி.தென்மேற்கு, ஜூலை 7

வலி.மேற்கு பிரதேச சபைப் பிரிவில் இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு கடந்த 2006ஆம் ஆண்டுக்கான உதவி நன்கொடைப் பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை நன்கொடைப்பணம் பெறாமல் இருக்கும் சனசமூக நிலையங்களை உடன் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை கேட்டுள்ளார். (202-135)

## கலாசுரபி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை7

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் சஞ்சிகையான 'கலாசுரபி 6' இன் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் வெளியீட்டுரையை உபபீடாதிபதி பா.தனபாலனும் நிகழ்த்துவர். (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அளவெட்டி மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 7ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறவுள்ளன

நிலையத் தலைவர் ப.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கலந்து கொள்வார்.

விளையாட்டு நிகழ்வில் மாவட்ட ரீதியாக 75 மைல் சைக்கிளோட்டம், 10 மைல் மரதன் ஓட்டம் என்பனவும் அங்கத்தவர்களுக்கிடையிலான 10 மைல் பெண்களுக்கான சைக்கிளோட்டம், 5 மைல் மரதனோட்டம் என்பவை இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படும் இரண்டாவது தொகுதியினரின் தையல் பயிற்சி கண்காட்சியும், மூன்றாவது தொகுதியினருக்கான தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கழக அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் லயன் ஆர் ஜெயபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகச் சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட தொழிற்பயிற்சி மாவட்டத் தலைவர் லயன் எஸ்.ஆறுமுகநாதன் கலந்துகொள்வார்.



சேவாலங்கா நிறுவனம் நடத்திய பொதுச் சுகாதார மேம்பாட்டு நிகழ்வையொட்டி கரவெட்டி ஸ்ரீபரமானந்த ஆச்சிரமத்தில் அண்மையில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்போது எடுக் கப்பட்ட படங்கள் (படங்கள் : சுந்தா)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசார விழா வியாழனன்று

யாழ்ப்பாணம்,ஜூலை7

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும்12 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன்புளியடி முருகன் ஆலய திருமண மண்டத்தில் பிரதேச கலாசார விழா நடத்தப்படவுள்ளது.

பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவும் கலந்து கொள்வர்.

கலைத்துறைக்கு சேவையாற்றிய பிரதேசத்தின் பதினொரு கலைஞர்கள் இந் நிகழ்வில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

2006, 2007 ஆம் ஆண்டுக்கான பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் இந்நிகழ்வில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்படும். (202)

# அதிபர் சேவை தரம் III நேர்முகப் பரீட்சை நாள்களில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கான நேர்முகப் பரீட்சையில் எதிர்வரும் 8ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்தார்.

இலங்கை அதிபர் சேவை தரம் IIIஇற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றிய யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பமாகியது.

இப் பரீட்சைத் தொடரில் எதிர்வரும் 8ஆம், 15ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்த பரீட்சைகள் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-202)

# ஜி.சீ.ஈ. மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை7

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் வட பிராந்திய இளைஞர் சபை ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்குகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதிவரை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி பொன். இராமநாதன் வீதியிலுள்ள சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)

# உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வினைத்திறமைகாண் பரீட்சை இல்லை

## நடத்தக்கோரி அமைச்சுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சையை நடத்த பொது நிர்வாக அமைச்சு முன்வர வேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வே.பொ.பாலசிங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் விசேட ஆளணியினராக நியமனம் பெற்று 17-05-1999 முதல் உள்ளூராட்சி உதவியா[illegible] வருகின்றோம்.

எமக்குரிய பதவி உயர்வுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளபோதும் இதுவரையில் அமுல்படுத்தப்படாத நிலை உள்ளது.

உரிய காலத்தில் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சையும் நடைபெறவில்லை.

ஒரேகாலப் பகுதியில், ஒரு திகதியில் நியமனம்பெற்ற உள்ளூராட்சி உதவியாளர்கள் ஒருவருட காலம் பிந்தி பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இதனைக் கவனத்தில் எடுத்து உரியநடவடிக்கை எடுக்கமுன்வரவேண்டும் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

# தென்மராட்சி மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களிற்கு சுற்றாடல் சார் செயற்பாடுகளாக பயிற்சிப் பாசறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் இப்பாசறைகள் நடத்தப்பட்டன.

பாசறைகளில் மாணவர்களுடன் அவர்களின் பெற்றோர்களும் பங்குபற்றி சுற்றாடல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.(202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல்: சர்வதேச மன்னிப்புச் சபை ஆழ்ந்த கவலை

கொழும்பு,ஜூலை7

இலங்கையில் பத்திரிகையாளர்கள் இராணுவப் படைகளினாலும் புலிகள் அமைப்பு மற்றும் கருணா குழு உட்பட ஆயுதக் குழுக்களாலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களுக்குள்ளாவதாகத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சப்பை இந்நிலைமை குறித்து ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்துப்படி மிகப் பிந்திய நிலையில் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள பத்திரிகையாளர் 'லங்கா ஈ நியூஸ்' செய்திச் சேவையின் ஆசிரியர் சதருவான் சேனாதீர ஆவார். இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல் மற்றும் ஊழல் விவகாரங்கள் பற்றிய செய்திகளை இந்த செய்திச் சேவை உடனுக்குடன் வெளியிட்டு வருகின்றது.

2007ஜனவரி முதல் இதன் ஆசிரியர் தொலைபேசி அழைப்புகள் மற்றும் 'ஈ மெயில்' மூலம் அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளமையால் அவரது உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று தாங்கள் கவலை கொண்டிருப்பதாக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களதும் மனித உரிமைகள் சார்ந்த பணியாளர்களதும் பத்திரம் குறித்து இலங்கையில் கவலைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்று குறிப்பிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, தினக்குரல் பத்திரிகையாளர் கே.பி.மோகன் விமானப்படை ஆட்களால் தாக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒன்பது பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னுமொருவர் கடத்தப்பட்டு காணாமற்போயிருப்பதால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ப)

*விடுதி மக்கள் வெளியேற்றப்பட்டமை*

## விசாரணை முடிவுகளை வெளியிடக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை7

கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவுகளை வெளியிடுமாறு கொழும்பில் உள்ள அரச சார்பற்ற உள்நாட்டு நிறுவனங்களின் ஒன்றியம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கேட்டுள்ளது.

குறிப்பிட்ட விசாரணையும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் தமிழ் சமூகத்தினர் மத்தியில் நிலவும் அச்சங்களைப் போக்கக் கூடியவையாய் இருக்கும் என்று நம்புவதாக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டமையானது கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் பாதுகாப்பு இன்மையையும் அமைதியின்மையும் தோற்றுவித்துள்ளது. நாட்டின் சமூகங்களுக்கிடையில் மேலும் முரண்பாடுகளை இது ஏற்படுத்தக்கூடும். இந்த நிலையில், விசாரணைகளின் முடிவுகளை வெளிப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம் என்று அரச சார்பற்ற உள்நாட்டு நிறுவனங்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ப)

## வீட்டுத் திட்டத்தை பணிப்பாளர் பார்வையிட்டார்

நவாலி,ஜூலை7

ஆனைக்கோட்டையில் ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை வடக்கு - கிழக்கு வீடமைப்புச் செயற்திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளையே பணிப்பாளர் பார்வையிட்டார்.

இவருடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ஆகியோரும் சென்றிருந்தனர். (202-100)


### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உயிருடன் புறொயிலர், கல்பேட், ஊர்ச் சேவல் என்பன மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **தாசன் பாம்,**
*158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.* (623992)

### இறைச்சிக்கோழி

உயிர் புறொயிலர் இறைச்சி, கல்பேட் என்பன மொத்தமாகவும்சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

**NEW R.S.K FARM**
(62330) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

### விற்பனைக்கு

கந்தரோடை, ஸ்கந்தவரோதயா பாடசாலைக்கு அருகில் 2¼ பரப்புடன் மூன்று அறைகளுடன் கூடிய புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **அருள்** *(குஞ்சன்)*
*கொக்குவில் 3ஆம் கட்டை,*
*K.K.S. வீதி, கொக்குவில்.* (62498)

### The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)

### Sky Computer Systems

நீங்கள் மலிவு விலையில் கொம்பியூட்டர் ஒன்றையும்,Printer,UPS,Monitor ,போன்ற மற்றும் பொருட்களை வாங்கவும். கொம்பியூட்டர் சம்பந்தமான விடயங்களை (DTP,M/O, I/Mail, H/W,Q/Book) கற்றுக்கொள்ளவும் விரையுங்கள்

**Sky Computer (Pvt) Ltd,**
**89,Kandy Road**
**Chundikkuli**
**Jaffna.**
**T.P No:-0212229109**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
யாழ் கச்சேரிக்கு அருகில்

### புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 09/07/2007-9.00AM**

ஏனைய அனைத்துக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Batch I :06/07/2007 Batch II : 07/07/2007
Batch III:08/07/2007 Batch IV :11/07/2007

### SUBRA (14) கல்வி நிறுவனம் சித்தன்கேணி

**A/L CHEMISTRY**
By:- E.RANJAN

A/L 2008
mon, wed 6→7.30 a.m. organic chemistry
Fri 6→7.30 Physical chemistry

A/L 2009
wed, Fri 5→6.15 General
Fri 6→7.30 Physical chemistry

**வணிகக் கல்வி**
By:- நந்தீஸ் B.B.A(Hons) Dip.in Ed.
2009 - தொழில் நிறுவனங்கள்
2008 - முயற்சியாண்மை Paper Class
* தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

* Logic- E.S.பவன் B.A (Hons) - 2007 A/L
தொடர் பரீட்சைகளும் கருத்தரங்குகளும் திங்கள் தோறும்.

வலிமேற்கு மாணவர்களுக்கு அரிய ஓர் சந்தர்ப்பம் இதுவே.
தமிழ் - கருத்தரங்கு
By:- குழந்தைவேல்
ஆரம்பம் 09-07-2007 (திங்கள்) மு.ப.8.30
* அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை
* ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் 8 மணிக்கு முன்னதாக உங்கள் வரவை உறுதிப்படுத்தவும். (625503)


## மரண அறிவித்தல்கள்



### சின்னையா ரவிவேந்தன் (ரவி)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ரவிவேந்தன் (ரவி) (01.07.2007) ஞாயிற்றுக் கிழமை ஜேர்மனியில் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் சின்னையா- ஈஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் விமலேஸ்வரியின் (குஞ்சு - ஜேர்மனி) அன்புக் கணவரும் செந்தூரனின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செந்தமிழ்செல்வியின் (பேபி) அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, கமலேஸ்வரி, தனேஸ்வரி, சாந்தேஸ்வரி (கனடா), யோகேஸ்வரன், கமலேஸ்வரன், கணேஸ்வரன் (ஜேர்மனி), விமலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.07.2007) சனிக் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
Jaffna T.P.: 021 4591520
Germany T.P.: 049 746114453

தகவல்:
**சின்னையா குடும்பம்,**
*(தந்தை).* (62426)

### திருமதி மகேஸ்வரி டானியல்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி டானியல் 04.07.2007 புதன்கிழமை மெல்போர்னி கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோ டானியலின் அன்பு மனைவியும் சாந்திகுமார், லலிதா, சத்தியகுமார், நிம்மி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான திருமதி தேவி சிங்கநாயகம், வில்லியம் லோறன்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராணி, ஜோ சிங்கநாயகத்தின் சிறியு தாயும் ராணி, பபி, ராசாத்தி, ராஜன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06.07.2007 வெள்ளிக் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.4, HACHETT COURT,
DELAHEY, VICTORIA 3037,
AUSTRALIA.
PHONE: 0061 3935640691

தகவல்:
ராஜேந்திரா சபாபதிப்பிள்ளை,
*உடுவில் வீதி, மானிப்பாய்.* (62501)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 - 10 - 1975



ஆண்டவன் அடியில் 20 - 06 - 2003

### அமரர் நாமகள் சிவபாலன்

*திதி : ஆனி அபரபக்க சப்தமி*

*எங்கள் குடும்பத்தின் குல விளக்கே*
*உங்கள் தீபம் அணைந்து விட்டாலும்*
*எங்கள் இதயங்களில் என்றும் ஒளிவீசும்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்*
*எங்கள் குல தெய்வம் சிதம்பர விநாயகரைப்*
*பிரார்த்திக்கிறோம்.*

சாந்தி!

*அம்பிகா டிஸ்பென்சரி,*
*சாவகச்சேரி.*

**குடும்பத்தினர்,**
சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (62418)

## மரண அறிவித்தல்

### மாப்பாணர் கந்தசாமி (விதானையார்)

(மகாசபைத் தலைவர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் கந்தசாமி 03.07.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் இரத்தினசபாபதி, சிவசுந்தரராசா (அமரர்), தயாகரன் (அமரர்), விபுலானந் வாமதேவன், சடாட்சரன் (ஜேர்மனி), சத்திகுமாரர் (அமரர்), சர்வேஸ்வரன் (அமரர்), திருமதி அமிர்தகௌரி - பஞ்சாட்சரம், திருமதி மங்களகௌரி நாகேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2007) சனிக் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கியான்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கௌரி அகம்',*
*துன்னாலை வடக்கு, கரவெட்டி.* (62505)

தகவல்:
**குடும்பத்தினர்.**




### கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி

Belarus *(பெலாரூஸ்)*, Poland *(போலாந்து)*, Ukraine *(உக்ரைன்)*, Russia *(ரஷ்யா)* *பிரபல பல்கலைக்கழகங்களில் மருத்துவம்* (M.B.B.S., MD), *பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல் கற்கை நெறிகள்*

**15 - July வரை அனுமதிகள் யாழ். நகரில் வழங்கப்படுகின்றன**

இல. 02, திருவள்ளுவர் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம். தொ.பே. 0777250555, ( 021 222 8247 -
இரவு 7 மணிக்குப் பின்) [illegible] விண்ணப்பிக்கலாம். பரீட்சை முடிந்தவுடன் பயணம். (அ.52820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## உடன் பிறப்புக்களுக்கே தீமை செய்கிறார்கள்

வரலாறு காணாதவகையில் தமிழ் மக்களுக்கு இன்னல் இழைக்கப்படுகிறது. அதன் காரணமாகவே இம் மக்களில் பலரும் எந்நேரமும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மக்களின் சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் வெளியில் இருந்து பல கொடுமைகள் இழைக்கப்படுகின்றன.

ஆனால், இந்தப் பரிதாபத்துக்குரிய மக்களிற் சிறு பகுதியினர் தம்முடைய உடன் பிறப்புக்களுக்கே நாளும் தீமை செய்து கொண்டிருக்கிறார்களே. அதுதான் மிகவும் கொடுமையானது. இந்த இக்கட்டான நிலையிலாவது தமது சுயநலத்தின் காரணமாகவோ அன்றி அறியாத்தனத்தாலோ செய்யும் தீமைகளை இவர்கள் கைவிடச் செய்ய என்ன செய்யலாம் என்று யோசிக்க வேண்டிய தருணம் இது.

மக்களின் அன்றாட வாழ்க்கையை மிகவும் பாதிக்கும் விலைவாசி ஏற்றத்திற்கு நம்மவர்களே எவ்வளவு தூரம் காரணமாயிருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியாத ஒன்று. தமது வருவாயே குறிக்கோள் என்னும் எண்ணத்துடன் செயற்பட்டு மக்களை அன்றாடம் தொல்லைப்படுத்தும் அலுவலக உத்தியோகத்தர்கள் பல இடங்களிலும் காணப்படுகிறார்கள். மற்றவர்கள் அசந்திருக்கும் நேரத்தைப் பார்த்திருந்தோ அன்றி பலாத்காரமாகவோ பொருள்களைத் தமதாக்கிக் கொள்ளும் கூட்டம் அதிகரித்துக் கொண்டு போகிறது. கோயிலின் பெயரால் அல்லது திருமண, மரண வீடுகளின் பெயரால் பொதுமக்களின் போக்குவரத்திற்கும் மற்றும் சுற்றுச் சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கும் பலர் எங்கும் காணப்படுகிறார்கள். இப்படிப் பற்பல. இந்த மிகவும் நெருக்கடி யான கால கட்டத்திலாவது இவற்றிலிருந்து மீளக்கூடிய ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படாதா?

கொக்குவில். **வை. சந்திரபாலன்.**

## கோழிப்பண்ணையாளர்களின் கனவு நனவாகுமா?

குடாநாட்டுக்கான தாரைப்பாதை மூடப்பட்டு பத்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் குடாநாட்டின் கோழிப்பண்ணையாளர்களின் கனவுகளோ இதுவரையில் நிறைவேறவில்லை. குடாநாட்டில் பெருமளவிலானோர் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முட்டை உற்பத்தி குடாநாட்டில் பெருமளவு வீழ்ச்சியடைந்துவிட்டது. கால்நடைத் தீவனங்களோ வழமையான விலையிலும் மூன்று, நான்கு மடங்காக விற்கப்படுகிறது. இதனால் முட்டையின் விலையோ வழமையான விலையிலும் மூன்று நான்கு மடங்காக ஏறிச்செல்கிறது. புரதச்சத்து என்று கூறப்படும் முட்டையைக்கூட வாங்கி உண்ணமுடியாத நிலையில் எத்தனை குடும்பங்கள் வேதனைப்படுகிறார்கள்?

குடாநாட்டில் முறையான குஞ்சு உற்பத்தி அறவே இல்லை. விமானம் மூலம் குஞ்சுகளைப் பெற்றுக்கொடுக்க இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2002 இற்கு முன்னர் விமானம் மூலம் குஞ்சுகளை பெற்றுக்கொடுத்தமையையும் இச்சமயத்தில் நினைவில் கொள்ளவேண்டும். கப்பல் மூலம் தருவிக்கப்படும் குஞ்சுகள் தவம் கிடந்து சீரற்ற முறையில் சொற்ப அளவில் வருகிறது. குடாநாட்டில் முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. முட்டையின் விலையோ நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. சீரான தீவன வழங்கலும் நடைமுறைப்படுத்தபடவில்லை. தற்போது பிரதேச கால்நடை திணைக்களங்களினால் தீவனங்களுக்கான கட்டணத்தினை ஒரேதடவையில் காசாக செலுத்துமாறு கூறப்பட்டுள்ளது. பொருளாதாரச் சுமையை எதிர்கொண்டுள்ள குடாநாட்டுப் பண்ணையாளர்களுக்கு ஏன் இந்த நிலைமை?

தீவன வழங்கலையும் குஞ்சு வழங்கலையும் சீரான முறையில் வழங்கினால் கோழி இறைச்சியையும் முட்டைகளையும் நியாயமான விலையில் குடாநாட்டுப் பண்ணையாளர்களினால் வழங்கமுடியும். எனவே கோழிப் பண்ணையாளர்களின் கனவுகளை நனவாக்க வடக்கின் கால்நடை உற்பத்தித்திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்குமா?

கோண்டாவில். **ப.நேசன்.**



வன்னியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நினைவுச் சுடர் ஏற்றி கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் விடுக்கும் தடுப்புக் காவல் உத்தரவு சட்டரீதியாகச் செல்லுபடியாகுமா?

### விளக்கம் அளிக்குமாறு வேலணை ஆலய வழக்கில் உத்தரவு

பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் விடுக்கும் தடுப்புக்காவல் உத்தரவு சட்டரீதியானதா?

- இது குறித்து கருத்தும் விளக்கமும் அளிக்கும்படி சட்டமா அதிபரைப் பணித்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

வடபகுதியைச் சேர்ந்த இரு தமிழர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், அதை ஒட்டியே இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயக் குருக்களான சிவராமலிங்கம் குருக்கள் மனோகரராஜா ஐயர் (வயது 55) மற்றும் மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர் நடராஜா ஜெகநாதன் (வயது 47) ஆகியோர் தொடர்பாகவே மேற்படி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட ஆலயக் கட்டடப் பகுதியிலிருந்து சில ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்ற குற்றச்சாட்டில் கடந்த மே 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

#### எதிர்மனுதாரர்கள் ஏழுபேர்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அப்பகுதி கடற்படை அதிகாரிகள் உட்பட ஏழு பேர் இம்மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த மனு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, சலீம் மார்சூக், அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.ஸி. வெலியமுனை பின்வருமாறு தெரிவித்தார்.

"போலியான காரணங்களை முன்வைத்தே இவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் எவரையும் தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே விடுக்க முடியும். ஆனால், இவர்கள் இருவரும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளரின் உத்தர வின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத் தகைய தடுப்புக்காவல் உத்தரவை விடுக்கும் சட்ட அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளருக்குக் கிடையாது." - என்றார் அவர்.

"தடுப்புக்காவல் உத்தரவை வழங்கும் அதிகாரம் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு மட்டுமே உள்ளது என்றே உயர்நீதிமன்றம் கருதுகின்றது. அந்த அதி காரம் அவ்வமைப்பின் மேலதிக செயலாளருக்குக் கிடையாது என்றே கணிக்கிறோம். எனினும், இது குறித்து ஒரு தீர்மானம் எடுப்பதற்கு முன் சட்டமா அதிபரின் கருத்தையும் உள்வாங்க வேண்டியுள்ளது. ஆகவே, இவ்விடயம் குறித்து அரசின் கருத்தை உடன் நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு அவருக்குக்கட்டளையிட்டுப்பணிக்கிறோம்."

- என்றனர் நீதியரசர்கள். வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (சி)

# தமிழர் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த நவாலிப் படுகொலைகள் உணர்வை உலுக்குபவை!

நவாலி - சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதல் மூலம் தமிழர் வரலாற்றில் 'பேரிடர்' ஏற்படுத்திய 12ஆம் ஆண்டு நினைவு நாள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆகும்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி தமிழர் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த கோரமான கொடூர நாள் ஆகும்.

அன்றைய தினம் நவாலி சென்.பீற்றர்ஸ் மற்றும் நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயம் அழிந்து சின்னாபின்னமாகி, அப்பாவியாக இடம்பெயர்ந்துகொண்டிருந்த மக்களை காவுகொண்ட கரிநாள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் உயர் அரச பீடத்தில் இருந்த மேதகு அதிகாரியின் பணிப்புரையின் பேரில் வலிகாமம் ஷெல், ரொக்கட் தாக்குதலில் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில் விமானப் படையினால் நடத்தப்பட்ட ஓர் இனப்படுகொலையாகும்.

வரலாற்றில் இந்த இரத்தக் கறைபடிந்த நாள்களை, நிகழ்வுகளை மறக்க முடியாது; தமிழினம் என்றும் மறக்காது.

முன்னேறிப் பாய்தல் என பெயர் கொண்ட 'லீப்போர்வேர்ட்' இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியிலிருந்தும், அளவெட்டியிலிருந்தும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென்மேற்கு, வலிமேற்கு, வலி.தெற்கு, வலி.வடக்குப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள் அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியிலிருந்து விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் தாறுமாறாகப் பாரிய சத்தங்களுடன் நடத்தப்பட்டன.



நவாலியில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் சடலங்கள்.

## 147 பேரைப் பலிகொண்ட துயரத்தின் வடு

அன்றைய தினம் காலை வலிகாமம் பகுதியிலுள்ள மக்கள் உடுத்த உடுபுடவைகளுடனும் கையில் அகப்பட்ட பொருள்களுடனும், கண்ணீரும் கம்பலையுமாக வெளியேறிய காட்சிகள் இன்றும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக தமிழர் மனத்தில் வடுவாக பதிந்துள்ளது.

கால் நடையாகவும், சைக்கிள்களிலும், தள்ளுவண்டில்களிலும், மாட்டு வண்டில்கள் மூலமாகவும், வழுக்கையாறுவெளி, நவாலி - ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை - மானிப்பாய் பிரதான வீதி வழியாக கைக் குழந்தைகள், வயோதிபர்கள், முற்றாக எழுந்து நடக்க முடியாதவர்கள் எனப் பலரும் பல இன்னல்களைச் [illegible]

அவ் [illegible]

ஹெலிகொப்டர் தாக்குதல், அகோரமான ஷெல் தாக்குதல்களினால் வீதிக்கு வீதி காயப்பட்டவர்கள், இறந்தவர்கள், காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வாகனங்களும் இல்லை.

வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருள்களும் அற்ற பொருளாதாரத் தடையான மந்தமான காலப்பகுதி அது.

இதேநேரம் காயமடைந்தவர்களை ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் சென்றால், அவர்களை காப்பாற்ற மருந்தகங்களோ வைத்தியசாலைகளோ இயங்க முடியாத அவல நிலை.

இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் நம் மண்ணில் மறக்க முடியாது!

அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளினூடாக வந்த மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும், நாவலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறினர். அவ்வேளையில் இரண்டு விமா னங்கள் மூலம் 13 குண்டுகள் வீசப்பட்டன.

அவ்வளவுதான்!

நவாலிக் கிராமம் ஒரு கணம் அதிர்ந்தது. வீதிகள் தடைப்பட்டு, மரங்கள் முறிந்து வீழ்ந்து, வீடுகள் தரைமட்டமாகி, மதில்கள் வீழ்ந்து பாரிய புகைமூட்டம் காணப்பட்டது.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயமும், நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயமும் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் அதிர்ந்தன.

சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே- குடாநாட்டின் பல்வேறு இடத்தைச் சேர்ந்தவர்கள் - பலியாகினர்.

இக் கொடூரச் சாவை, கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, உடல்சிதறி குற்றுயிராகக் கிடந்த நிகழ்வுகளை எம்மால் மறந்துவிட முடியாது.

சுமார் 360 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிகிச்சை அளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்திப் பலர் உயிர் இழந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அன்றைய தாக்குதல் சம்பவங்களுக்கிடையேயும் பொதுமக்கள் சேவையில் நேரடியாகப் பங்கு கொண்ட வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இரு கிராம அலுவலர்களான நாவலி வடக்கு பிரிவு அலு வலர், சில்லாலைப் பிரிவு கிராம அலுவலர் மற்றும் ஸ்தலத்தில் பலியான அரச சேவையாளர்கள் ஆகியோரை எவராலும் மறக்கவே முடியாது.

**செ.ரமேஷ்**

அன்றைய தினம் மக்கள் தொண்டுப் பணியில் ஈடுபட்டு உணவு, குடிநீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்ததை மறக்க முடியாது.

எதிர்வரும் திங்கட்கிழமை நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயத்திலும் வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன. மேற்படி 1995 ஆண்டு நவாலி இனப்படுகொலை தொடர்பாக நவாலி வடக்கு சோமசுந்தர புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயப் பகுதியிலும் இனப் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பமாகக் கறந்த 60 கோடி ரூபா பணம் கரிபியன் தீவு வங்கிக் கணக்கில் வைப்பு!

## உயர் மட்டப் பிரமுகர்கள் சம்பந்தம் என்று எம்.பி. தகவல்

இரகசியப் பொலிஸாரால் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் முன்னாள் விமானப் படை அதிகாரி நிசாந்த கஜநாயக்க தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்களைக் கடத்தி அவர்களிடமிருந்து இதுவரை 60கோடி ரூபாவை கப்பமாகப் பெற்றுள்ளார். இதன் பின்னணியில் செயற்பட்ட உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் கரிபியன் தீவில் உள்ள வங்கிக்கணக்கில் இப்பணத்தில் ஒரு தொகை வைப்பிலிடப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன வியாழனன்று நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டார். அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

முன்னாள் விமானப்படை அதிகாரி நிசாந்த கஜநாயக்க ஆட்கடத்தலில் ஈடுபட்டு அவர்களிடமிருந்து கோடிக்கணக்கில் பணம் கப்பமாகப் பெறப்பட்டுள்ளமை இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. கஜநாயக்கவே அதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

அவரைக் கைதுசெய்த இரகசியப் பொலிஸாரிடம் கஜநாயக்க வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் அவர் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கஜநாயக்க தனியாக இக்கடத்தலில் ஈடுபடவில்லை. உயர் மட்டத்தினர் பலரின் உதவியுடனேயே அவர் செயற்பட்டுள்ளார்.

கஜநாயக்கவால் இதுவரை பலரிடமிருந்து 60 கோடி ரூபா பணம் கப்பமாகப் பெறப்பட்டுள்ளது. அந்தப் பணத்தில் ஒருதொகை உயர் மட்டத்தில் உள்ள ஒருவரின் கரிபியன் தீவில் உள்ள வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. கஜநாயக்க இரகசியப் பொலிஸாருக்கு வழங்கி வாக்குமூலத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

**சரியானமுறையில் வாக்குமூலம் பெறப்படுமா**

ஆனால் கஜநாயக்கவிடமிருந்து சரியான முறையில் - நீதியான முறையில் வாக்குமூலம் பெறப்படுமா என்று சொல்ல முடியாது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை கஜநாயக்க மீது சுமத்துவது அநியாயம். கஜநாயக்கவை வைத்து உயர் மட்டத்தினர் பலர் கப்பம் மூலம் பணம் சம்பாதித்துள்ளனர்.

கஜநாயக்கவிடம் சரியான முறையில் வாக்கு மூலம் பெறப்பட்டால் - அவ் வாக்குமூலம் பாதுகாக்கப்பட்டால் - இக் கடத்தல் சம்பவத்திற்கு பின்னால் உள்ள உயர் மட்ட சதிகாரர்கள் பலர் சிக்குவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தேர்தலில் போட்டியிட்ட ஒருவர் இரகசியப் பொலிஸில் முக்கிய பொறுப்பில் இருக்கின்றார். இந்த நிலையில் கஜநாயக்கவிடமிருந்து சரியான முறையில் வாக்குமூலம் பெறப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

**தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கண்டிக்காமல் இருப்பதேன்?**

தமிழ்-முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கோடிக்கணக்கில் பணம் கப்பமாக பெறப்பட்ட சம்பவங்களை அரசில் உள்ள முஸ்லிம் -தமிழ் தலைவர்களும், ஜாதிக ஹெல உறுமய தேரர்களும் கண்டிக்காமல் இருப்பதையிட்டு நான் வெட்கப்படுகிறேன்.

நான் ஓர் உண்மையான பௌத்த மதத்தவன். பௌத்த மதத்தைப் பாதுகாக்க வந்த இந்தத் தேரர்கள் புத்தரின் கோட்பாட்டிற்கு எதிராக நடைபெறும் இவ்வாறான சம்பவங்களைக் கண்டிக்காமல் இருப்பது எனக்கு வெட்கத்தை தருகின்றது.

இப்போது இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கும் கஜநாயக்க மீது பல குற்றச்சாட்டுகளை இரகசியப் பொலிஸார் சுமத்தியுள்ளனர். இதன் மூலம் கஜநாயக்கவை பின்னாலிருந்து இயக்கிய பல முக்கியஸ்தர்கள் தப்பிக்க இடமளிக்கப்பட்டுள்ளது.



இந்த அரசின் ஒவ்வொரு ஊழல்களையும் நான் வெளிப்படுத்திக்கொண்டு வருகிறேன். அது அடுத்தடுத்த மாதங்களில் உண்மையாகிவிடும்.

அதேபோல், இந்த அரசு மேற்கொண்டு வரும் பொய்யான யுத்தம் பற்றியும் அது எப்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் நான் வெளிப்படுத்துவேன்.

- இவ்வாறு லக்ஷ்மன் செனவிரட்ண மேலும் தெரிவித்தார். (சி)

# 2ஆயிரம்பேரைக் கொன்று குவித்ததே ஜனாதிபதி செய்த பெரும் சாதனை !

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. சாடல்



''மஹிந்த ராஜபக்ஷவின் 19 மாத கால ஆட்சியில் 3 லட்சத்து 40 ஆயிரம் தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 2 ஆயிரம்பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மூன்று லட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். 800 பேர் காணாமல் போயுள்ளனர். இதுதான் ஜனாதிபதியின் சாதனை''

-இவ்வாறு சாடினார் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிரம்பரநாதன்.

அவசர காலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் வியாழனன்று உரையாற்றும் போதே இப்படிப் பட்டியல் போட்டுச் சுட்டிக்காட்டினார் பத்மினி.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. திட்டமிட்டு தமிழர் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த நாள் முதலாக...**

நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இந்த நாட்டை ஆட்சி செய்துவரும் அனைத்து சிங்களக் கட்சிகளும் தமிழர்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளையே முடுக்கிவிட்டுள்ளன.

1979 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன ஆறுமாதங்களில் பயங்கரவாதத்தை ஒழிப்பேன். போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதாணம் என்று கூறிக்கொண்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தி தமிழர்களைக் கொன்றுகுவித்தார்.

தொடர்ந்து ஜனாதிபதியான ஆர்.பிரேமதாஸ வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் மீது விமானக்குண்டுவீச்சு நடத்தினார். வகைதொகை இன்றித் தமிழ் இளைஞர் யுவதிகளைக் கைது செய்து சிறையில் அடைத்தார்.

1994 ஆம் ஆண்டில் சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்தபோது சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறிக்கொண்டு ஆறு லட்சம் தமிழர்களை இடம்பெயரச் செய்தார்.

**தமிழத் பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன அரச பயங்கரவாதம்**

இவரைத் தொடர்ந்து ஏழைகளின் தலைவர் என்று கூறிக்கொண்டு வந்த ராஜபக்ஷ அரச பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்து விட்டுள்ளார்.

சிறிதும் மனிதாபிமானம் இன்றி 52 பாடசாலை மாணவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

குண்டுகளை வீசி தமிழ் மக்களை கட்டாயமாக இடம்பெயரச் செய்து மீள் குடியேற்றம் என்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றுகிறது அரசு. இதற்கென ஜப்பான் நாட்டின் உதவிகள் வீணடிக்கப்பட்டுள்ளன.

ஏ - 9 வீதியை மூடி 6 லட்சம் தமிழ் மக்களைப் பட்டினி போட்டு அழிக்கின்றனர். வடக்கு - கிழக்கில் அரச பயங்கரவா தத்தை, தமிழர்களை அழிக்கும் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். அதேபோன்று தெற்கில் அதிகார கதிரைகளுக்காக அடிபட்டுக்கொள்கின்றனர்.

ஆனால், தமிழர்களை அடக்கி ஒடுக்கவும், அழித்து ஒழிக்கவும் கொண்டுவரப்படும் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கு மட்டும் அனைத்து சிங்களக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து விடுகின்றன.

இப்போது போன்று நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும், தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கவும், தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கவும் இந்த சிங்களக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். - என்றார். (சி)



நாடாளுமன்றத்திலிருந்து...

### கடத்திக் கப்பம் பெற்ற

# திமிங்கிலங்கள் தப்பிவிட்டன நெத்தலிகளே சிக்கியுள்ளன !

## சபையில் மனேகணேசன் விசனம்



''தலை நகரில் தமிழர்களைக் கடத்திக் கப்பம் பெற்ற திமிங்கிலங்கள் தப்பி ஓடிவிட்டன. சிறு நெத்தலிக்குட்டிகளை மட்டும் பிடித்துவைத்துக்கொண்டு வீறாப்புப் பேசவேண்டாம்''

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

மனோகணேசன் தொடர்ந்து கூறியதாவது:-

ஜனாதிபதி கமிஷன் மீதோ அல்லது விசேட விசாரணைக்குழுக்கள் மீதோ மக்களுக்கு நம்பிக்கையில்லை. பொலிஸில் முறைப்பாடு செய்தாலும் அவர்கள் வெட்டிப் பிடுங்கிவிடப் போவது ஒன்றுமில்லை.

தலைநகரில் வெள்ளை வானில் கடத்தப்பட்டனர். இப்பொழுது வெள்ளை விமானத்திலும் கடத்தப்படுகின்றனர்.

தமிழ்மக்களை கடத்திக் கப்பம் பெற்று வந்த திமிங்கிலங்கள் இந்த வெள்ளை விமானங்களில் தப்பி ஓடிவிட்டன.

இதுவரை 136 பேர் கடத்தப்பட்டு காணாமல்போயுள்ளனர். ஒருவரும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், காணாமல் போனவர்களுள் 90 வீதமானோர் திரும்பி விட்டனர் என்று அரசு கூறுகின்றனது.

இது அப்பட்டமான ஒரு பொய். பாதிக்கப்பட்ட மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இதற்கு அரசு பதில் கூறவேண்டும் - என்றார். (சி)

# தமிழ்க் கூட்டமைப்பினர் ஒருபோதும் இந்த அரசுடன் இணையமாட்டார்கள்

## உறுதி கூறுகிறார் வினோ றோதராதலிங்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல; அவர்களின் தலைமுறையினரைக்கூட இந்த அரசால் வளைத்துப்போட முடியாது. கூட்டமைப்பினர் அரசுடன் இணையப் போகின்றனர் என்று அரசு கூறியமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ றோதராதலிங்கம் தெரிவித்தார்.

வியாழனன்று நாடாளுமன்றில் இடம் பெற்ற அவசரகாலச் சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் வாதிகள் அல்லர், அரசியல் போராளிகள். கூட்டமைப்பினர் அபிவிருத்திக்கோ, அற்ப சலுகைகளுக்கோ அல்லது பதவிகளுக்கோ அடிமையாகமாட்டார்கள்.

அடிமையாவோம் என்று அரசு நினைத்தால் அது கேலிக்கூத்தாகும். நாம் எமது மக்களின் பிரச்சினையை எடுத்துக் கூறுவதற்காகவே இச்சபைக்கு வந்துள்ளோம்.

எமக்கு அபிவிருத்தியோ அதிகாரமோ தேவையில்லை. எமது தேவையெல்லாம் எம்மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதே.



எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். வருடத்திற்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கொல்லவே அரசு திட்டமிட்டுள்ளது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சுட்டுக்கொல்லப்பட்டால் அதற் கான முழுப்பொறுப் பையும் இந்த அரசே ஏற்கவேண்டும்.

அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ் மக்கள் மீதான கடத்தல் நடவடிக்கைகளும், கொலைகளும் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இப்படியான ஒருநிலையில் அரசுடன் இணைய வேண்டிய அவசியம் எமக்கில்லை.

இந்தஅரசால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமல்ல அவர்களின் தலைமுடியைக்கூட வளைத்துப் போடமுடியாது.

நாம் அரசுடன் இணையப்போகிறோம் என்று அரச தரப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தமைக்க நாம் எமது கண்டனங்களைத் தெரிவித் துக்கொள்கிறோம் - என்றார். (சி)

# 'லாவ் காஸ்' விலையை உடனடியாக 1060 ரூபாக அதிகரிக்க நீதிமன்று அனுமதி

கொழும்பு, ஜூலை 07

'லாவ் காஸ்' விலையை 959 ரூபாவிலிருந்து உடனடியாக 1,060 ரூபாவாக அதிகரிக்க அனுமதி அளித்த உயர் நிதிமன்றம் எரிவாயு விலை விடயத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபை பக்கச் சார்பாகச் செயற்படுவதாகக் கண்டனமும் கூறியிருக்கின்றது.

நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு எதிராக 'லாவ் காஸ்' நிறுவனம் தாக்கல் செய்திருந்த அடிப்படைஉரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே இவ்வாறு உயர் நீதிமன்றம் கருத்துத் வெளியிட்டது.

இந்த மனு உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நிஹால் ஜயசிங்க, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப் பட்டது.

எதிர்வரும் காலத்தில் எரிவாயு விலை அதிகரிப்புத் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நீண்ட காலத்திட்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படியும் நுகர்வோர் அதிகாரசபைக்கு உத்தரவிட்டது.

வழக்கு ஓகஸ்ட் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## குறுகிய அரசியல் லாபங்களுக்காக படைநகர்வுச் செயற்பாடுகள்

தன்னுடைய குறுகிய அரசியல் லாபங்களுக்காகப் படையினரைப் பலிகொடுத்து இராணுவ நகர்வுகளை முன்னெடுக்கின்றது மஹிந்தவின் அரசு என்பது இப்போது பரகசியமாகி வருகின்றது. தென்னிலங்கை பௌத்த - சிங்கள மேலாண்மை சக்திகளின் ஆதரவைத் தக்கவைப்பதன் மூலம் தனது ஆட்சி அதிகார செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வதில் கண்ணாக இருக்கும் இந்த அரசுத் தலைமை, அந்தப் பேரினவாத சக்திகளை வளைத்துப் போட்டுத் தனது கைக்குள் வைத்திருப்பதற்காக சிறுபான்மைத் தமிழர் மீதான இராணுவத் தாக்குதல் கெடுபிடிகளை இறுக்குகின்றது. தமிழர்களின் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுக்கு எதிரான தன்னுடைய போர்முனைப்பைத் தீவிரப்படுத்துவதன் மூலம் தன்னை பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தின் ஒட்டு மொத்தத் தலைமையாகக் காட்டி, தன்னுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள விழைகின்றது அது.

இந்தப் பின்புலத்தில்தான் அரசியல் இலாபத்துக்கான இராணுவ நகர்வுகள் இங்கு கட்டவிழ்கின்றன.

தொப்பிகல காட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காகத் தற்சமயம் அரசுத் தரப்பினால் தீவிரமாக முன்னெடுக்கப்படும் படை நடவடிக்கை கூட அத்தகைய குறுகிய அரசியல் லாபத்தை உள்நோக்கமாகக் கொண்டதே என்பதும் இப்போது அம்பலமாகி விட்டது.

அரசுப் படைகள் ஈட்டியவை எனக் கூறப்படும் இராணுவ வெற்றிகளை முன்னிறுத்தித் தென்னிலங்கை அரசியலையும் வெற்றிகரமாக நடத்தலாம் என நினைக்கிறது கொழும்பு அரசு.

தொப்பிகலக் காடு இதோ முழுமையாக வீழ்கிறது என மார்தட்டும் அரசின் பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அந்தச் சாதனையை(?) அரசியல் லாபமாக்கும் தமது தரப்பின் சூழ்ச்சியையும் பதமாக முன்னெடுக்கின்றார்.

''இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படை தொப்பிகலவை ஒட்டிய பகுதிகளில் இருபதாயிரம் துருப்புகளை வைத்திருந்தும் அப்பிரதேசத்தை அதனால் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே இயலவில்லை. ஆனால் அச்சாதனையை இலங்கைப் படைகள் இப்போது முழுமையாகச் செய்திருக்கின்றன.'' - என்று தென்னிலங்கையில் அவர் வீரம் பேசியிருக்கின்றார்.

இந்த அரசியல் வெற்று வேட்டுக்கு கிழக்கில் இந்திய அமைதிப் படையின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா நல்ல பதிலடி தந்திருக்கின்றார்.

''தொப்பிகல மிகப்பெரிய காட்டுப் பிரதேசம். கேந்திர முக்கியத்துவம் ஏதும் அதற்கு இல்லை. உண்மையில் அது புலிகளின் மறைவிடம் மட்டுமே. அங்கு புலிகளின் வைத்தியசாலை, சிறைக்கூடம், பயிற்சி முகாம் போன்றன உள்ளன . புலிகளின் இந்த வசதிகளைத் தாக்கி அழிக்கும் வெற்றிகர நடவடிக்கைகளை இந்திய அமைதிப்படைக்கு நானே கட்டளைத் தளபதியாக செயற்பட்டு முன்னெடுத்திருக்கிறேன். அதன் பின்னர் நாம் எமது தளங்களுக்குத் திரும்பி விடுவோம். அந்தப் பிரதேசத்தில் நிலைகொண்டி ருக்க வேண்டிய தேவை ஏதுமில்லை. அங்கு நிலைகொண்டு காத்திருப்பதற்கு அவசியமுமில்லை'' - என்று தெளிவுபடுத்தியிருக்கின்றார் அவர்.

ஆக, கேந்திர முக்கியத்துவமற்ற ஒரு பிரதேசத்தில் பெருமளவு துருப்புகளையும் தளபாடங்களையும் குவித்து, அகலக் கால் பரப்பி, வீண் விரயமாக நிலைகொண்டிருக்கிறது இலங்கைப் படைகள். நாம், கேந்திர முக்கியத்துவமற்ற பிரதேசம் அது என்பதை உணர்ந்ததால் அங்கு படை நடவடிக்கைகளோடு நிறுத்திக் கொண்டோம், நிலைகொள்ளவில்லை என்பது இந்திய இராணுவ அதிகாரியின் விளக்கமாகின்றது.

அத்தகைய வீண் விரய வேலையை குறுகிய அரசியல் லாபத்துக்காக - பெரும் உயிர், உடைமை இழப்புகளுடனும் சொத்து நாசம், மோசமான செலவினம் ஆகியவற்றோடும் - முன்னெடுக்கிறது கொழும்பு அரசுத் தலைமை.

இந்த நடவடிக்கையை ஒட்டி, ''இந்தியப் படையால் கூட சாதிக்க முடியாததை இலங்கைப் படைகள் சாதிக்கின்றன'' என்ற வீராவேஷப் பேச்சு வெளிப்படுத்தப்படுவது கூட, குறுகிய அரசியல் லாப நோக்கப் பிரசாரத்தின் ஓர் அங்கமே.

மாவிலாறு இராணுவ வெற்றியின் முதலாம் ஆண்டு நிறைவை எதிர்வரும் (ஜூலை) 26 ஆம் திகதி பெரும் வெற்றித் திருநாளாகக் கொண்டாட ஜனாதிபதி மஹிந்தரின் அரசு தயாராகின்றது. அப்போது தொப்பிகலவையும் முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, அதன் மூலம் மொத்தம் 5 ஆயிரத்து 200 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்ட கிழக்கு மாகாணத்தைப் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக விடுவித்தாயிற்று என்று பிரகடனப்படுத்தி, தென்னிலங்கையை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி, தம்மைப் பெரும் வீரபுருஷராகத் தெற்கு மக்களின் முன்னர் நிலைநிறுத்தலாம் என மனக்கோட்டை கட்டுகின்றார் மஹிந்தர்.

இத்தகைய அரசியல் லாபத்துக்கான நோக்கில் முன்னெடுக்கப்படும் தொப்பிகலை படை நடவடிக்கை மூலம் அரச படைகளின் இராணுவ இலக்குகள், எதிர்பார்ப்புகள் எட்டப்படுமா, நிறைவுசெய்யப்படுமா என்பவையெல்லாம் கேள்விக்குறியே.

கிழக்கு மாகாணம் முழுவதையும் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்தாயிற்று என்ற அறிவிப்போடு, கிழக்கில் தனியான மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பையும் மற்றொரு அரசியல் அதிர்வேட்டாக மஹிந்தர் விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது, எப்படியென்றாலும் தொப்பிகலவில் அகலக் கால் வைத்துள்ள படையினர், தமக்குத் தாமே விரித்த பொறியில் தாங்கள் வீழ்கின்றனர் என்பதை உணரும் காலம் விரைவில் வரும் என்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அது உண்மையானால் - தொப்பிகலை அரசுப் படைகளுக்கு நிஜமான பொறியாக மாறுமானால் - அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் குறுகிய அரசியல் லாப நோக்கங்களும் கூட பொறியில் சிக்குண்டுவிடும். அதுதான் நிலைமை.

# தொப்பிகலவை கைப்பற்றுவதற்கு அது முக்கியத்துவமான பிரதேசம் அல்ல!

## முன்னாள் இந்திய அமைதிப்படைத் தளபதி



கொழும்பு, ஜூலை 07

1987 ஆம் ஆண்டு ஜூலை முதல் 1990ஆம் ஆண்டு மார்ச் வரை, இலங்கையின் வடக்கிலும் - கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அமைதிப் படை போரிட்டு வந்துள்ளது. இப் படைகள் தொப்பிகலக் காடுகளிலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டன. எனினும், அங்கு நிலைகொள்ள முயலவில்லை. அப்படி நிலைகொள் வதற்கான தந்திரோபாய முக்கியத்துவம் இருக்க வில்லை.

- இவ்வாறு இந்திய இராணுவ முன்னாள் பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகைக்கு வியாழக்கிழமை அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல புதன்கிழமை வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கு முகமாகவே, முன்னாள் மேஜர் ஜெனரல் மேத்தா இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

20, 000 துருப்புகளைக் கொண்டிருந்தும், இந்திய அமைதிப்படையால் தொப்பிகலவைக் கைப்பற்ற இயலவில்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

அசோக் மேத்தா தமது பேட்டியில் -

**புலிகளின் கேந்திர பதுங்குமிடமாகத் திகழ்ந்தது**

''தொப்பிகல பரந்து விரிந்த ஒரு காட்டுப்பகுதி. எத்தகைய தொரு முக்கிய தொடர்பாடலுக்கும் வழிகிடையாது. அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கேந்திர பதுங்குமிடமாகத் திகழ்ந்தது'' என விளக்கியுள்ளார்.

''இக்காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மருத்துவமனைகள், சிறைக் கூடங்கள், பயிற்சி முகாம்கள் ஆகியவை இயங்கின. இவற்றை நிர்மூலமாக்கு வதற்காக நானே தனிப்பட்ட ரீதியில் இராணுவ நடவடிக்கைகளை வழி நடத்தினேன்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

''இராணுவ நடவடிக்கைகளை முடித் துக்கொண்டு எப்போதும் நாம் எமது நிலைக்குத் திரும்பி விடுவோம். அங்கு நிலைகொள்ளவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அங்கு கைப்பற்றுவதற் கும் ஒன்றுமிருக்கவில்லை'' என்றும் அவர் காரணம் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய கிழக்கு மாவட்டங்களில், மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, அக்கால கட்டத்தில் இந்திய அமைதிப் படையை வழிநடத்தி வந்தவராவார்.

அதேவேளை, இந்திய அமைதிப்படை தொப்பிகலவில் முகாம்களை நிறுவி இருந்தது என தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் ஆஸ்திரேலிய வானொலி நிலையமொன்றுக்கு தாம் அளித்துள்ளபோட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

**பெருமளவிலான மனித சக்தியும் பொருட்செலவும் தேவை**

''தொப்பிகலவைக் கைப்பற்றுவதும், தக்கவைப்பதும் பெரும் பகீரதப் பிரயத்தனங்களாகும். பெருமளவிலான மனித சக்தியும் பொருட்செலவும் இவற்றிற்குத் தேவை'' என சுயாதீன இராணுவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

''தமிழீழ விடுதலைப் புலிகளை, இராணுவ ரீதியில் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு சிக்கலான வளைவுக்குள் மாட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது பெருத்த விரயங்களையும் பொருட்படுத்தாத ஒரு முன் நகர்த்தலாகும் '' என்று இவர்கள் கூறியுள்ளார்கள்.

இளந்திரையன் 'தமிழ் நெற்' றுக்கு சமீபத்தில் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில், 'தமிழீழ விடுதலைப் புலிகளின் வாபஸ் தந்திரோபாயமான உபாயமாகும். இலங்கை இராணுவம் 'பொறிக்குள்' நடைபோடுகின்றது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இராணுவம் அதன் செயற்பாடுகளில் குறியாக உள்ளது**

இலங்கை இராணுவம் தொப்பிகலப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ''எனினும், அரசின் நிலைப்பாடு எத்தகைய உறுதி படைத்தது என்பதை எதிர்காலமே நிர்ணயிக்கும். கிழக்குக்கான எமது திட்டங்களை நாம் மறுசீரமைத்துக் கொண்டிருக்கிறோம். இத்தருணத்தில் எம்மால் இதை மாத்திரம் கூறமுடியும்'' என்றும் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும், இலங்கை இராணுவம் அதன் செயற்பாடுகளிலேயே குறியாகவுள்ளது.

தொப்பிகலவில் 700 சதுர கிலோ மீற்றரை நாம் ஏற்கனவே, கைப்பற்றி விட்டோம். இன்னும் சுமார் 7 முதல் 8 மைல்கள் வரையே பிடிக்க வேண்டும். இதன் பின்னர், முழுப்பகுதியும் எம் கட் டுப்பாட்டுக்குள்ளேயே வந்து விடும் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க வியாழக்கிழமை தெரி வித்துள்ளார். 'இது இதற்கு முன்னர் நடைபெறாத ஒரு காரியமாகும்' என்றும் அவர் பெரு மிதம் தெரிவித்துள்ளார்.

**இதற்கு முதல் நடைபெறாத காரியம் என்கிறார் இராணுவப் பேச்சாளர்**

''தொப்பிகலவைக் கைப்பற்றும் விடயத்தில் முன்னேற்றம் மந்தகதியிலேயே உள்ளது. விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்ப்பு உண்டு. தரை அமைப்பும் சிக்கலானது'' என சுயாதீன இராணுவ அவதானிப்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சண்டை முடிவடைந்தால், ஏன் விமா னப்படை புதன்கிழமையும் வியாழக்கிழமையும் அப்பகுதி மீது வான் வழித் தாக்குதலை மேற்கொண்டன? என 'சண்டே டைம்ஸ்' இதழில் இக்பால் அத்தாஸும் கேள்வி எழுப்பியிருக்கின்றார். (சி)

# மனித உரிமை ஆணைக்குழுவை அனுப்பும் ஐரோ. ஒன்றியத்தின் யோசனை கைவிடப்பட்டது

## ஏனைய இணைத்தலைமை நாடுகள் ஏற்றுக்கொள்ளாததால்

கொழும்பு, ஜூலை 7

மனித உரிமை கண்காணிப்பு ஆணைக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்க ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முயற்சி அமெரிக்கா, ஜப்பான், மற்றும் நோர்வே நாடுகள் ஆதரிக்க பின்னடித்தமையால் கைவிடப்பட்டுள்ளது.

உயர் நிலை ராஜதந்திரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

தொடர்ந்து இலங்கைக்கு உதவிகளை வழங்குவது என்று இணைத்தலைமை நாடுகள் தீர்மானித்துள்ளன. உதவிகளை நிறுத்துவதானது இலங்கை மக்களை மிக மோசமாகப் பாதிப்பதாக இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

ஜூன் 26ஆம் திகதி ஒஸ்லோவில் இடம்பெற்ற இணைத்தலைமை நாடுகளின் செயல் குழுக்கூட்டமொன்றில் இலங்கைக்கு மனித உரிமைகள் ஆணைக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்ற யோசனை ஒன்றை ஐரோப்பிய ஒன்றியப் பிரதி நிதியான ஜெர்மன் தூதுவர் முன்வைத்தார். ஏனைய மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொள்ள மறுத்து, தங்கள் தலையீடு இல்லாமலே இலங்கை தனது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள விட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்கள்.

குழுவில் நடந்த விவாதத்தில் பங்கு பற்றிய ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒரு அமைதித் தீர்வைக் காணும்படி இணைத் தலைமை நாடுகள் நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார்.

அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக், நோர்வே தூதுவர் பிராட்ஸ்கர், ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தைச் சேர்ந்த அன்றீஸ் மைக்கலிஸ் ஆகியவர்கள் குழு கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பல்வேறுநாடுகளிலிருந்தும்இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படுவதை நிறுத்தும்படி வந்துள்ள நெருக்குதல்கள் பற்றி இணைத்தலைமை நாடுகள் விவாதித்தனர் என்றாலும் உதவிகளைத் தொடர்வது என்று முடிவெடுத்தனர். (அ-ப)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயற்றிட்டம், செயல்நிலை ஆய்வு தொடர்பான முன்னேற்ற மதிப்பீடு மேற்கொள்வதற்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார். அத்துடன் யூன் மாதக் கொடுப்பனவும் இன்று வழங்கப்படும். (1)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 4, 5 வகுப்புகளின் ஆசிரியர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 4, தரம் 5 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1-207)

* * *

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டிலான பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் ம.வி. மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உடுவில் வாழ்வகத்தின் தலைவரும் தேசியக் கல்வியற் கல்லூரி விரிவுரையாளருமான ஆ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க. கணேஸும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும் கலந்துகொள்வர்.

இப்போட்டிகளில் பிரதேசத்தில் உள்ள 83 முன்பள்ளிகளிலிருந்து தெரிவான சிறார்கள் கலந்துகொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது. (1-207)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 24 | ஞாயிற்றுக்கிழமை 08.07.2007 |
| திதி : அட்டமி | மு.ப 08.36 |
| நட்சத்திரம் : | ரேவதி பி.ப. 01.00 |
| சுபநேரம் | : 08.58 - 10.28 |
| ராகுகாலம் | : 04.28 - 05.58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85வீத நிர்வாக அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் எஞ்சிய 15 வீதத்தை பங்குபோட 107 அமைச்சர்கள்

## ஐக்கியதேசியக் கட்சி எம்.பி. விமர்சிக்கிறார்



நமது நாட்டின் நிர்வாக அதிகாரங்களுள் 85 வீதமானவை ஜனாதிபதியிடமும் எஞ்சிய 15 வீதமானவை 107 அமைச்சர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்கள் என்ற பெயரில் அனைவரும் பொம்மைகளாகவே இருக்கின்றனர். ஜனாதிபதிக்கு பந்தம் பிடிப்பதைத் தவிர வேறு எந்தப் பொறுப்புகளும் இந்த அமைச்சர்களிடம் இல்லை என ஐ.தே.க. கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் விமர்சித்தார்.

அதிகாரப் பதவியில் இருக்கும் ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் அதனை நாடாளுமன்றத்திற்கு பதில் அளிக்கக் கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

லக்ஷ்மன் கிரியெல்ல தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

நாட்டின் நிதி நிர்வாகமும், நிதி ஒதுக்கலும் நாடாளுமன்றத்திடமே இருக்கின்றது என்பது பெயரளவில் மட்டுமே. அதி முக்கியமான நிதி அமைச்சை ஜனாதிபதியே தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பதால் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களையும் தட்டிப்பறித்து விட்டார்.

இதுவரை காலமும் 75 வீதமான நிர்வாகப் பொறுப்புகள் ஜனாதிபதியிடம் இருந்தன. ஆனால், ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார். இதன்மூலம் 85 வீதமான நிர்வாக அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமைச்சுகள் தொடர்பாக நாம் கேள்வி கேட்கும்போது அவ்விடயம் என்னிடம் இல்லை ஜனாதிபதியிடம்தான் கேட்க வேண்டும் என்று அமைச்சர்கள் கூறி வருகின்றனர். நிர்வாக அதிகாரங்கள் குவிந்து கிடப்பதுபோல் ஊழல் மோசடிகளும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

இப்படியான நிலையில் நாம் எப்படி ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும்? சர்வதேச நாடுகளில் அமைச்சுகளுக்கான ஆலோசனைக் குழு கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களே அங்கம் வகிக்கின்றனர்.

ஆனால், இங்கு அமைச்சர்கள்தான் ஆலோசனைக் குழுக்களில் இருக்கின்றனர். அமைச்சுகளில் இடம்பெறும் குற்றங் குறைகளை ஆராய்ந்து சீரமைப்பதற்குப் பதிலாக ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்காகவே இந்த அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு ஜனாதிபதிக்கு பந்தம் பிடிப்பதைத் தவிர வேறு பொறுப்புகள் வழங்கப்படவில்லை.

85 வீதமான அமைச்சுகளுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் ஜனாதிபதியின் அரசமாளிகையிலேயே நடைபெறுகின்றன. நாடாளுமன்ற ஆசனங்கள் காலியாகவே இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையை சோமாலியாவுக்கு ஒப்பாக சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை எமது நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீரழிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்தியாக இல்லை என சுட்டிக்காட்டியுள்ளது வெட்கக்கேடான ஒரு விடயம் - என்று லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார். (சி)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அமைச்சுப் பொறுப்பு வேண்டாம்!

## பதவிகளைத் துறக்க கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 07

ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சுப் பதவிகள் எதனையும் வகிக்கக்கூடாது. தற்போது வகிக்கின்ற அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட வேண்டும். அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆகக் குறைத்து இந்த நாட்டின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும்.

- இவ்வாறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

'ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சுப் பதவிகள் எதனையும் வகிக்கக்கூடாது' என்ற தனிநபர் பிரேரணை ஒன்றை ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

கடந்த கால அரசியலைவிட தற்போதைய அரசியல் நடத்தை மிகவும் வித்தியாசமானது. தேவையற்ற அளவிற்கு அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர். வெளிநாடுகளில் பிரதமர்களோ ஜனாதிபதிகளோ அமைச்சுப் பதவிகளை வகிப்பதில்லை.



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எந்தவிதமான அமைச்சுப் பதவிகளையும் வகிக்கவில்லை. பிரித்தானியாவில் பிரதமர் மிகவும் திறமைவாய்ந்த நிதி அமைச்சராக இருந்தார். அவர் பிரதமரானதும் வேறொருவருக்கு நிதி அமைச்சைப் பாரங்கொடுத்துவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூட எந்த அமைச்சுப் பதவிகளையும் வகிக்கவில்லை. இவற்றையெல்லாம் நாம் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அமைச்சுப்பதவிகளை வகிப்பது உண்மையில் அருவருக்கத்தக்கது. பதவிகள் கூடினால் நிச்சயம் சிறப்பாகச் சேவையாற்ற முடியாது - என்றார். (சி)

# முறைப்பாடு செய்து 3 மாதங்களின் பின் எம்.பி. தலையிட்ட பின்னரே பொலிஸ் விசாரணை

## பிரிட்டனில் தமிழருக்கு ஏற்பட்ட அனுபவம்



லண்டன், ஜூலை 7

தாக்குதலுக்குள்ளாகி முகத்தில் காயத்துக்குள்ளான இலங்கைத் தமிழர் ஒருவர் செய்து கொண்ட முறைப்பாடு குறித்து பிரிட்டிஷ் பொலிஸார் விசாரணை மேற்கொள்வதில் அசட்டையாக இருந்துள்ளார் என்று குற்றச்சாட்டு ஒன்று எழுந்துள்ளது.

பிரிட்டிஷ் பொலிஸார் இனரீதியில் இந்த விடயத்தில் நடந்து கொண்டுள்ளார் என்று காயமுற்றவரான சஞ்சீவ் சுப்பிரமணியம் சார்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்திற்காக புலன் விசாரணை பொலிஸ் அதிகாரி கெவில் பிளாக்லூட் சுப்பிரமணியத்திடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இனரீதியாக தன்மீது பகிடிவிடப்பட்டதாக தெரிவித்த ஒரு மனிதரை சிலர் தாக்கிக் கொண்டிருந்தபோது அதில் சஞ்சீவ் சுப் பிரமணியம் தலையிட்டதால் முகத்தில் கண்ணாடித் துண்டினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. லண்டன் கிங்ஸ்லூட் என்ற இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனியார் ஒன்று கூடல் நிகழ்வு ஒன்றின் போது பிறநாட்டைச் சேர்ந்த ஒருவரை இனரீதியான சொற்களைப் பயன்படுத்தி ஒரு சிலர் நையாண்டி செய்து தாக்கிய போது சஞ்சிவ் அதில் தலையிட்டு தடுக்க முயன்றார். அப்போதே அவரது முகத்தில் போத்தலால் குத்தப்பட்டது. சம்பவம் பற்றி சுஹேப் பகுதிப் பொலிஸில் ஏப்ரல் மாதம் முறையிடப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை ஆரம்பிக்க இவ்வளவு காலம் பிடித்தமைக்கு கவலை தெரிவிப்பதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையிட்டதின் பின்னரே பொலிஸார் அக்கறை எடுத்திருப்பதாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தவரான சுப்பிரமணியத்தின் (40 வயது) குடும்பத்தினர் பொலிஸாரின் அசமந்தப் போக்கு குறித்து அதிர்ச்சியடைந்துள்ளதுடன் அவர் வெள்ளையராக இல்லாமல் போனதே இதற்குக் காரணம் என்று கருதுகின்றனர்.

முகத்தில் இடது கண் குருடாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சுப்பிரமணியம் முகத்தில் நிரந்தர வடுக்கள் ஏற்படக்கூடிய பாதிப்புக்கும் ஆளாகியுள்ளார். முகத்தில் 50 தையல்கள் போட்டு காயத்துக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

காயமுற்று இரண்டுமாதங்களாகியும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் போல் பர்ஸ்டொவிடம் முறையிட்டுள்ளார். எம்.பி.தலையிட்டதன் பின்னரே பொலிஸார் அக்கறை செலுத்தியுள்ளனர். (அ-ப)

# கலைத்தூது அழகியல் கல்லூரி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியின் ஆரம்ப வைபவம் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகமும், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியும் இணைந்து பரதநாட்டியத்தில் முதல் தடவையாக ஆரம்பித்துள்ள வளாகம் நடத்தவுள்ள பட்டப்படிப்பு பயிற்சி நெறி இதுவாகும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளரும், யாழ். பல் கலைக்கழகத்தில் இடைவரவு விரிவுரையாளருமான திருமதி சாந்தினி சிவனேசனும், சிறப்பு விருந்தினர்களாக திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைத்தூது அழகியல் கல்லூரி இயங்கும் இல. 128, டேவிற் வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-1)

### மூதூர் படுகொலையில்

# மறைக்கப்பட்ட துப்பாக்கி ரவை குறித்து விசாரணை நடத்துவது மிக அவசியமானது

## சர்வதேச சட்ட வல்லுநர் குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 07

மூதூரில் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் படுகொலை குறித்து விசாரணையின் முக்கிய தடயமான துப்பாக்கி ரவை காணாமல்போயிருக்கிறது. இந்த ரவை தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு உண்மை தெளிவுபடுத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு அனைத்துலக சட்ட வல்லுநர்கள் குழு மூன்றாவது முறையாகவும் வலியுறுத்தியுள்ளது.

அனைத்துலக சட்ட வல்லுநர்கள் குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மூதூர் படுகொலையின் தடயப் பொருள்களில் இருந்து காணாமல் போன ரவை தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தப்பட்டு, தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த ரவை படுகொலை செய்யப்பட்ட 17 பணியாளர்களில் ஒருவரது சடலத்தில் இருந்து மீட்கப்பட்ட ஒன்றாகும்.

படுகொலை நடைபெற்ற போது அப்பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரிடம் இதுவரை எந்தவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய விசாரணை நடைபெறுவது அவசியமானதாகும். - எனத் தெரிவிக்கப்பட்டது.

### கண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறி, ஓட்டோ ஆகியன நகருக்குள் பிரவேசித்துள்ளன என்று கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்தே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்போதிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கு புதிய வீதிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியவற்றைப் படையினர் மீட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பிரதேசத்தைப் படையினர் கடந்த வருடம் மீட்டதை அடுத்து விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கை விட்டுச் சென்றுள்ளனர் என அவர் மேலும் கூறினார். (1)

### தொப்பிகலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியுள்ளது - என்று அசோஸியேட் பிறஸ் தெரிவித்தது.

தொப்பிகலவை விடுவிக்கும் கடைசிக் கட்டத்தில் நாம் இருக்கிறோம் - என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறினார். (அ)

# பஸ் கட்டணங்களை உடனே குறைக்கக் கோருகிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூலை 07

அதிகரிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை உடனடியாகக் குறைக்குமாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள்களின் விலை அதிகரிப்பாலேயே பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டது என்று அரசு காரணம் சொல்கிறது.

மண்ணெண்ணெய் மானியத்தை அரசு நிறுத்தியமையும் எரிபொருள்களுக்கான வரிச் சலுகையை வழங்காமையுமே பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதற்கான முக்கிய காரணங் கள்.

பஸ் கட்டணம் 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு 12 வீதத்தால் அதிகரித்துள்ளதாகப் பொய் சொல்கிறது.

பஸ் கட்டண அதிகரிப்பானது மிகவும் பாரதூரமானது. நாட்டு மக்கள் அனைவரையும் இது பாதித்துள்ளது. இது மக்கள் மீது சுமத்தப்பட்ட பாரிய சுமையாகும்.

அரசு 'மிஹின் எயர்' போன்ற சேவைக்குப் பணத்தை முதலீடு செய்வதைத் தவிர்த்து அத்தியாவசியத் தேவையான பஸ் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விமானங்களில் பயணிப்பதைவிடவும் பஸ்களில் தான் மக்கள் அதிகம் பயணம் செய்கின்றனர். எது முக்கியம் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார். (சி)

### ஆவரங்கால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளையும் அதில் வந்தவரையும் காணவில்லை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

இவரது 'சேர்ட்' பொக்கற்றில் இருந்து சாதகக் குறிப்பு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - கொலையுண்ட நபரும் அவரது மகனும் சுன்னாகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வதிரி நோக்கிச் சென்றனர் என்றும் -

சம்பவத்தின் பின் அவரது மகனும் அவர் கள் பயணஞ் செய்த மோட்டார் சைக்கிளும் காணாமற் போயின என்றும் [illegible] தெரிவித்தன. (அ-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவன[illegible]361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org